2013 மே 6]

398—

நியாய விலைக் கடை

***13037—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஒன்றியம், ஈச்சம்பட்டு கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஒன்றியத்திலுள்ள வடசேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 383 குடும்ப அட்டைகளுடன் ஈச்சம்பட்டு கிராமத்தில் ஏற்கெனவே ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இக்குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் ஈச்சம்பட்டு கிராமத்தைச் சுற்றி 1 கி.மீ. தூரத்திற்குள்ளேயே உள்ளனர். எனவே, ஈச்சம்பட்டு கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. நியாய விலைக் கடை தற்போது இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்குப் பக்கத்திலுள்ள சுட்டகுண்டா, கதவாளம் பகுதிகளில் நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. ஆனால், சொந்தக் கட்டடம் இல்லாமல் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதிலுள்ள பிரச்சினை என்னவெனில், வாடகைக் கட்டடமானது பத்துக்கு பத்து அடி என்ற சிறிய அறையில் இருக்கின்றது. வாரத்திற்கு ஒரு நாள், இரு நாள் பொருட்களை எடுத்து வர*

வேண்டுமென்று கடைகளை மூடிவிட்டுச் சென்றுவிடுகிறார்கள். எல்லாக் கூட்டுறவுக் கடைகளையும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்ட முடியவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கதவாளம் மற்றும் சுட்டகுண்டா பகுதிகளிலே கூட்டுறவுக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவாரா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிதி கொடுக்க வேண்டும். இல்லையென்றால், அந்தச் சங்கத்திலே நிதி இருக்கும்பட்சத்தில் கட்டிக் கொடுப்பார்கள். அந்தச் சங்கத்தினுடைய* liability*–ஐப் பொறுத்துதான் கட்டடம் கட்ட முடியும். இல்லையென்றால் மாவட்ட ஊராட்சி முகமையின் நிதியைப் பெற்று, அதன் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதி பெற்று கட்டடங்கள் கட்டுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு ஒன்றியத்திலும் சரி, மாதனூர் ஒன்றியத்திலும் சரி, பல கடைகளில் ஓரிரு கடைகள்தான் சொந்தக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பெரும்பாலான கடைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அங்கேயுள்ள கூட்டுறவுக் கடைகளுக்கு முடிந்த அளவிற்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 மே 6]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே 110 முழுநேரக் கடைகள் இருக்கின்றன. 76 கடைகள் சொந்தக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. முழுநேரக் கடைகளில் 33 கடைகள் வாடகைக் கட்டடத்திலே இருக்கின்றன. அதிலும் அதிகமாக ஆம்பூர் கற்பகம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்துகிற 20 கடைகளில் 19 கடைகள் இடம் கிடைக்காததனாலே, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான வாய்ப்பு இல்லாததனாலே வாடகைக் கட்டடத்திலே இயங்குகின்றன. ஆக, உங்களுடைய தொகுதியிலே 33 கடைகள் மட்டுமே வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன. பகுதிநேரக் கடைகள் முழுவதுமே இலவசக் கட்டடத்தில் இயங்குகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை துறையின் மூலமாக ஆய்வு செய்து அதற்கான உரிய நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதை ஆராய்ந்து, அதிவிரைவிலே அதுபற்றி துறையின்மூலம் கருத்துரு பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 399, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

399—

சாலை வசதி

***20346—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தளி ஒன்றியம், உரிகம் முதல் பேல்பட்டி வரையுள்ள மலைக் கிராமங்களுக்குச் சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அஞ்செட்டி, உரிகம் முதல் உடுபராணி வரையுள்ள சாலை 5.00 கி.மீ. நீளம் உடையது. இச்சாலைக்கு